www.tamilarangam.net

# கண்டன ஆர்ப்பாட்டம்

தமிழீழ மக்களே !

## அடக்குமுறைக்கெதிராக
## போராட அணிதிரளுங்கள்.

தமிழீழ மக்களின் விடுதலையை, சுதந்திரமான வாழ்வை அழித்தொழிக்கும் செயற்பாட்டில் இந்திய -ஸ்ரீலங்கா அரசுகள் இறுக்கமாக கூட்டுச் சேர்ந்துள்ளன. தமிழீழ மக்களின் பிணங்களின் மேல் நின்று இந்திய - ஸ்ரீலங்கா அரசுகள் தங்கள் நலன்களைக் காக்க மிலேச்சத்தனமாக செயற்படுகின்றன.

இந்திய அரசு, தனது விருப்பங்களுக்கும், தேவைகளுக்கும் இணங்கி, கைகட்டி, வாய் பொத்தி சேவகம் செய்ய மறுத்ததனால் விடுதலைப் புலிகளை இந்தியாவில் தடை செய்து தமிழீழ மக்களின் சுதந்திர எழுச்சியை நசுக்க ஸ்ரீலங்கா அரசுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது.

இத்தடைச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இன்று தமிழீழப் பகுதிகள் மீது , குறிப்பாக யாழ் குடாநாடு மீது ஸ்ரீலங்கா அரசு தனது வெறித்தனமான தாக்குதலை நடாத்தத் தொடங்கியுள்ளது. எங்கும் விமானக் குண்டு வீச்சுக்களும், ஷெல் தாக்குதல்களும், துப்பாக்கி முழக்கமுமாய் எம் இனம் அவலமாய் குரலெழுப்புகிறது.

எம் இனத்தின் மீது இந்திய - ஸ்ரீலங்கா அரசுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் அடக்குமுறைகளை சர்வ உலகிற்கும் வெளிக்காட்ட வேண்டியது எமது பொறுப்பு!

உணர்வுள்ள தமிழீழ மக்களே !

ஒன்று திரளுங்கள். எமது உணர்வின் வலிமையை கேடயமாக்கி எம் இனத்தை, எம் தேசத்தைக் காக்க புறப்படுங்கள் !

கூட்டுச் சதியின் கோரமுகத்தைக் கிழித்துக்காட்ட தமிழீழ மக்களே அணிதிரளுங்கள் !

இராணுவத் தீர்வு காண முற்படும் ஸ்ரீலங்கா அரசின் முயற்சியை நமது ஒன்றுபட்ட பலத்தினால் முறியடிப்போம். ஸ்ரீலங்கா இராணுவத் தீர்வுக்கான, இந்திய அரசின் இராஜதந்திர ஆதரவு எனும் சதியை மக்கள் சக்தியால் உடைத்தெறிவோம்.

காலம் :- 26. 06. 1992 (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 2.30 மணி

இடம் :- Place De La Finlande

Metro :- INVALIDES

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்